# பெருநகர
# சென்னை மாநகராட்சி

EDP CELL * CORPORATION OF CHENNAI *
09 OCT 2017

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

ஆண்டு சந்தா ரூ. 2,000/-

மலர் : 23 இதழ் : 1179 நாள் : 05 - 10 - 2017

## 1. வருவாய்த்துறை/ மண்டலம்–14

ம.அ.14.வ.து.ந.க.எண்.ஆர்1/0114/2017

### ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மீன் விற்பனை அங்காடியில் மேடைகள் குத்தகை அடிப்படையில் வழங்க ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி உரிய படிவத்தில் வரவேற்கப்படுகின்றன. காலியாக உள்ள மேடைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) ஏலம்/ஒப்பந்தம் விண்ணப்ப படிவத்தின் விலை | : | ரூ.413/– (கேட்பு காசோலையாக மட்டும்) |
| 2) செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை | : | ரூ.5000/– (கேட்பு காசோலையாக மட்டும்) |
| 3) ஒப்பந்தம் திறப்பு மற்றும் ஏலம் விடப்படும் தேதி மற்றும் நேரம் | : | 20/10/2017 மாலை 3.30 மணிக்கு |
| 4)ஏலம் நடக்குமிடம் | : | மண்டல அலுவலர் அலுவலகம்,<br>மண்டலம்–14, எண்.6/64, புழுதிவாக்கம் மெயின் ரோடு,<br>புழுதிவாக்கம், சென்னை–600 091. |

ஒவ்வொரு கடையின் ஏலத்திற்கு பிறகு ஒப்பந்தப்புள்ளிகள் வருகை புரிந்த ஒப்பந்தப்புள்ளிதாரர்கள்/ஏலதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஏலம் விட குறிப்பிடப்பட்ட நாள் ஏதாவது காரணத்தினால் பொது விடுமுறை என்று அறிவிக்கப்பட்டால் ஏலம் உடனடியாக வரும் மறு வேலை நாள் அன்று குறிப்பிட்ட இடத்தில் மற்றும் நேரத்தில் நடைபெறும்.

மூடி சீல் வைக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் ஒப்பந்தம்/ஏலம் நடைபெறும் நாள் அன்று மாலை 3.00 மணிவரை பெறப்படும்.

அ) மூன்று வருடத்திற்கு குறையாமல் மாத குத்தகை அடிப்படையில் விட உத்தேசிக்கப்பட்டுள்ள கடைகள் பற்றிய விவரங்கள், விதிமுறைகள் ஆகியவை ஒப்பந்தப்புள்ளி/ஏல விண்ணப்பத்துடன் வழங்கப்படும். ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்துடன், தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியில் எடுக்கப்பட்ட ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) த்துக்கான வங்கி கேட்பு காசோலை "REVENUE OFFICER CORPORATION OF CHENNAI" என்ற பெயரில் எடுக்கப்பட்டு இணைக்கப்பட வேண்டும். வங்கி கேட்பு காசோலை இணைக்கப்படாத மற்றும் குறைந்த தொகைக்கான வங்கி கேட்பு காசோலை இணைத்து அனுப்பப்படும் ஒப்பந்தபுள்ளிகள் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்படும். ஏலத்தில் கலந்து கொள்பவர்களும் பிணை வைப்புத்தொகை ரூ.5000/– ஐ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வங்கி கேட்பு காசோலையாகத்தான் செலுத்த வேண்டும்.

ஆ) ஒப்பந்தபுள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் வைத்து சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தபுள்ளிகள் குறிப்பிட்ட நாள் மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்குள், மண்டல அலுவலர்(பொ), மண்டலம்–14 அவர்களுக்கு விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்திட அதற்கான பெட்டி மண்டல அலுவலகம், மண்டலம்–14ல் உள்ளது. மேடை ஒன்றுக்கு ஒரு விண்ணப்பம் வீதம் அனுப்பப்பட வேண்டும். மேலும் விண்ணப்பத்துடன் இருப்பிட ஆவணம் ஒன்றினை (ரேசன் கார்டு, வாக்காளர் அட்டை, பாஸ்போர்ட், வங்கி கணக்கு புத்தகம், ஆதார் அட்டை, ஒட்டுநர் உரிமம் இவற்றில் நகல் எதேனும் ஒன்றினை) இத்துடன் இணைத்து அனுப்புமாறு கோட்டுக்கொள்ளப்படுகிறது.

இ) ஒப்பந்தபுள்ளி/ஏல விண்ணப்பப்படிவங்களை பெற அதன் விலையினை வங்கி கேட்பு காசோலை "REVENUE OFFICER, CORPORATION OF CHENNAI" என்ற பெயருக்கு செலுத்தி வருவாய்த்துறை, மண்டலம்–14, அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ) ஒப்பந்தம் எவ்வித காரணமும் தெரிவிக்கப்படாமல் நிராகரிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உள்ளது. எந்த ஒரு மீன் மேடையையும் ஏலம் விடுவதிலிருந்து நிறுத்தி வைக்க பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அதிகாரம் உண்டு.

விண்ணப்பபடிவங்கள் வேலை நாட்களில் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வருவாய்த்துறை, மண்டலம்-14, அலுவலகத்தில் 12.10.2017 அன்று முதல் விற்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் விற்பனை ஏலம் விடுவதற்கு 2 நாட்களுக்கு முன்னுள்ள வேலை நாள் அன்று பிற்பகல் 3.00 மணிக்கு நிறுத்தப்படும். (அதாவது 18.10.2017 அன்று பிற்பகல் 3.00 மணியுடன் நிறுத்தப்படும்.

**மீன் விற்பனை அங்காடி மேடைகளின் விவரங்கள்**

| வ. எண் | மீன் விற்பனை அங்காடி அமைந்துள்ள இடம் | மேடை எண் | மேடையின் பரப்பளவு (ச.அடி) | சந்தை விலை ஒரு சதுர அடி (வாடகை தோராயமாக) ரூ பாய் | மாத வாடகை (தோராயமாக) ரூ பாய் |
|---|---|---|---|---|---|
| 1. | பள்ளிக் கூட சாலை மற்றும் அண்ணா நெடுஞ்சாலை சந்திப்பு, பெருங்குடி, சென்னை – 600 096. கோட்டம்–184 | 1 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 2. | | 2 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 3. | | 3 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 4. | | 4 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 5. | | 5 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 6. | | 6 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 7. | | 7 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 8. | | 8 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 9. | | 9 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 10. | | 10 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 11. | | 11 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 12. | | 12 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |
| 13. | | 13 | 100 (ச.அடி) | 16/– | 1600/– |

**மண்டல அலுவலர்(பொ)/ம-14**



குப்பையை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தரம் பிரித்து
வீடு தேடி வரும் துப்புரவுப் பணியாளர்களிடம் வழங்குங்கள்

## 2. மின்துறை

மி.து.ந.க.எண்.சி.பி.மே2/பி5/12350/2017

### மின் ஒப்ப அறிவிப்பு

கீழ்கண்ட பணிகளுக்கு மின் ஒப்பங்கள் மேற்பார்வை பொறியாளர் / மின்சாரம் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் மதிப்பு (ரூ) | ஒப்ப வைப்புத் தொகை (ரூ) | தகுதியுள்ள வகுப்பு | ஒப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | மி.து.ந.க.எண்.சி.பி.மே2/பி5/12350/2017 மின் ஒப்பம் மண்டலம் 1 முதல் 5 வரையில் உள்ள உதவி கோட்ட மின் பொறியாளர்களுக்கு ஆய்வு மேற்கொள்வதற்கு தலா 1 மொத்தம் 5 ஆய்வு வாகனங்கள் 2 வருட காலத்திற்கு வாடகைக்கு தருவித்தல் | 41,97,500 | 41,975 | இதே பணியில் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் | 20.10.2017 காலை 11.00 மணிக்கு |
| 2. | மி.து.ந.க.எண்.சி.பி.மே2/பி5/12348/2017 மின் ஒப்பம் மண்டலம் 6 முதல் 10 வரையில் உள்ள உதவி கோட்ட மின் பொறியாளர்களுக்கு ஆய்வு மேற்கொள்வதற்கு தலா 1 மொத்தம் 5 ஆய்வு வாகனங்கள் 2 வருட காலத்திற்கு வாடகைக்கு தருவித்தல் | 41,97,500 | 41,975 | இதே பணியில் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் | 20.10.2017 காலை 11.00 மணிக்கு |
| 3. | மி.து.ந.க.எண்.சி.பி.மே2/பி5/12349/2017 மின் ஒப்பம் மண்டலம் 11 முதல் 15 வரையில் உள்ள உதவி கோட்ட மின் பொறியாளர்களுக்கு ஆய்வு மேற்கொள்வதற்கு தலா 1 மொத்தம் 5 ஆய்வு வாகனங்கள் 2 வருட காலத்திற்கு வாடகைக்கு தருவித்தல் | 41,97,500 | 41,975 | இதே பணியில் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் | 20.10.2017 காலை 11.00 மணிக்கு |

1. ஒப்பப்படிவங்கள் http://tenders.tn.gov.in என்ற இணையதளம் மூலம் **20.10.2017 அன்று காலை 11.00 மணிக்குள் வரை** தெரிந்துக் கொள்ளலாம். ஒப்பந்ததாரர் Digital Signature Certificate பெற்றிருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் தான் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரர் **20.10.2017 அன்று காலை 11.00 மணிக்கு** முன்னதாக இணையதளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் பெறப்படும் ஒப்பங்கள் **20.10.2017 அன்று காலை 11.15 மணிக்கு** மின்துறை, மேற்பார்வை பொறியாளர்/மின்சாரம் அலுவலகத்தில் ஒப்பந்ததாரர் முன்னிலையில் இணையதளம் மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி

திறக்கப்படும் நாள் விடுமுறையாக இருப்பின்அடுத்த வேலை நாட்களில் அதே நேரத்தில் திறக்கப்படும். மேலும், அசல் முன் வைப்புத் தொகை இதர ஆவணங்கள் மேற்பார்வை பொறியாளர்/மின்சாரம் அலுவலகத்தில் பெறப்படும்

3. ஒப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கும் பொழுது பிணை வைப்புத் தொகை/வரைவு காசோலையின் நகலினை (Scanned Copy) இணைத்து அனுப்ப வேண்டும். பிணை வைப்புத் தொகைக்கான வரைவு காசோலை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் பெயரில் எடுக்கப்பட வேண்டும், வரைவு காசோலையின் காலம் 90 நாட்களுக்கு மிகையாகாமல் இருக்க வேண்டும்.

4. முன்வைப்புத் தொகைக்கான அசல் வரைவு காசோலை அல்லது அசல் வங்கி உத்திரவாதத்தினை மின்துறையில் ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலரிடம் **20.10.2017 அன்று காலை 11.00 மணிக்குள்** சமர்ப்பிக்க வேண்டும்

5. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும்.

6. நிர்வாக காரணங்கள் ஏதேனும் இருப்பின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யும் உரிமை அலுவலருக்கு உள்ளது

**மேற்பார்வை பொறியாளர் / மின்சாரம்**

## 3. இயந்திர பொறியியல் துறை

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/2170/2017**

### மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது.

| வ. எண் | கோப்பு எண். பணியின் விவரம் | பணியின் மதிப்பு உத்தேசமாக (ரூ. இலட்சங்கள்) | முன்வைப்புத் தொகை (ரூ.) | ஒப்பந்ததாரர் தகுதி நிலை | ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | **எம்1/2170/2017** 7 எண்ணிக்கையில் Tempo Traveller அல்லது அதற்கு இணையான BS IV வகை மற்றும் வீல்பேஸ் 3700 மி.மி. உடைய வேன் கொள்முதல் செய்தல் ஒப்ப விதிகளின்படி | 70 | 70,000/– | வாகன தயாரிப்பாளர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் | 20.10.2017 @ 3.00 P.M |

1. ஒப்பப்படிவங்கள் http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். ஒப்பந்ததாரர் Digital Signature Certificate பெற்றிருக்கவேண்டும். மேலும், ஒப்பந்தப்புள்ளிகளை இணையதளம் மூலம் தான் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரா் ஒப்பந்த புள்ளிகளை **20.10.2017 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு** முன்னதாக இணையதளம் மூலம் சமா்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் பெறப்படும் ஒப்பங்கள் **20.10.2017 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு** ரிப்பன் மாளிகை இயந்திர பொறியியல் துறை தலைமை அலுவலகத்தில் ஒப்பந்ததாரா் முன்னிலையில் இணையதளம் மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாட்களில் அதே நேரத்தில் திறக்கப்படும். மேலும் அசல் முன் வைப்புத் தொகைக்கான ஆவணங்கள் மேற்பாா்வை பொறியாளா் (இயந்திரம்) அலுவலகத்தில் 20.10.2017 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் சமா்ப்பிக்கப்பட வேண்டும்.

3. ஒப்பப்படிவங்கள் சமா்ப்பிக்கும்பொழுது முன் வைப்புத் தொகைக்கான காசோலையின் நகலினை (Scanned Copy) இணைத்து அனுப்ப வேண்டும். முன் வைப்புத் தொகைக்கான காசோலை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையா் அவா்களின் பெயரில் எடுக்கப்பட வேண்டும். காசோலை செல்லத்தக்க காலம் குறைந்தபட்சம் 90 நாட்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். காசோலையை கவா்–1ல் (Cover-1) சமா்ப்பிக்க வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும். நிா்வாக காரணங்கள் ஏதேனும் இருப்பின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யும் உரிமை ஒப்பம் கோரும் அலுவலருக்கு உள்ளது

**மேற்பாா்வை பொறியாளா் (இயந்திரம்)**

## 4. திடக்கழிவு மேலாண்மை துறை

**தி.க.மே.து.பொ.ப.சா.ந.க.எண். அ3/034&036/2017**

### மின்னணு குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திடக்கழிவு மேலாண்மை துறையில் பிளிச்சிங் பவுடா் கொள்முதல் செய்வதற்கு இரண்டு பணிகளுக்கு மின்னனு குறுகிய கால ஒப்பங்கள் மேற்பாா்வை பொறியாளா் (திகமே) அவா்களால் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் விவரம் | பணியின் மதிப்பு (ரூ.இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | வடக்கு வட்டார அலுவலகத்தின் கீழ் இயங்கும் மண்டலங்கள் 1 முதல் 5 வரை தேவையான 190மெ.டன் பிளிச்சீங் பவுடா் வழங்குதல் | 48.83 | 48,830 |
| 2. | மத்திய வட்டார அலுவலகத்தின் கீழ் இயங்கும் மண்டலங்கள் 6 முதல் 10 வரை தேவையான 190மெ.டன் பிளிச்சீங் பவுடா் வழங்குதல் | 48.83 | 48,830 |

ஒப்பந்ததாரா்கள் https://tntenders.gov.in இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின்னனு ஒப்பத்தில் 13.10.2017 பிற்பகல் 3.00 மணிக்குள் பங்கேற்கலாம், அன்றே பிற்பகல் 3.30 மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.

**மேற்பாா்வை பொறியாளா்(திகமே)**


C.P.P. 1 (26) 2017-2018 / P.R.O-C.W.N.B./ 225 Bks of 5 Lvs / Sep 2017

## பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் சந்தா கட்டண விபரம்

**ஆண்டு சந்தா ரூ.2,000/-**

சந்தா கட்டணத்தை கேட்பு வரைவோலையாக (Demand Draft) The Commissioner, Greater Chennai Corporation, Chennai-600 003 என்ற பெயரில் எடுத்து கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி, ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரை தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**மக்கள் தொடர்பு அலுவலர்,**
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.